

# "சித்தன்"

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.

ஆசிரியர் C. P. சாமி.


| மாலை 1. | பிப்ரவரி 35. | மணி 2. |
|---|---|---|
| Vol 1. | February. 35. | No. 2. |


உள்ளுறை.


| | | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | கடவுள் வழிபாடு ... | ... | 33. |
| 2. | சங்கங்களும் பத்திரிகைகளும் | ... | 34. |
| 3. | நமது ஆகாரம் ... | ... | 37. |
| 4. | மானிடரின் எழு பருவம் | ... | 40. |
| 5. | பழனிஸ்தல வழிகாட்டி | ... | 41. |
| 6. | ...ர் பெற மார்க்கம் | ... | 45. |
| | ... | ... | 49. |
| | ... பகுதி ... | ... | 52. |
| | ... | ... | 55. |
| | ...ஷ்காரம் ... | ... | 57. |
| | ...தன் ... | ... | 61-64. |



ஈ211, N35cN
N35·1·2
159917

# "சித்தன்"

## ஓர் மாதாந்தப் பத்திரிகை.

கல்வி, கைத்தொழில், வியாபாரம், விவசாயம், வைத்தியம், சுகாதாரம் முதலிய அரிய கட்டுரைகளுடனும், தமிழ் வைத்தியர்கட்கு பெரிதும் பயன்படும் விஷயங்களுடனும் ஆங்கிலத் திங்கள் தோறும் பழனியினின்றும் வெளி வருகிறது.

### சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருடம் 1-க்கு | உள் நாடு | ... | ரூ. 0—8—0. |
| ,, | வெளி நாடு | ... | ரூ. 1—0—0. |
| | தனிப்பிரதி | ... | ரூ. 0—1—0. |

சந்தாத் தொகையை முன்னுடியே செலுத்திவிடவேண்டும். வி. பி. யில் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. எப்போது சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் அவ்வருட ஜனவரி மீ-முதல் கணக்கு வைக்கப்பட்டு, ஜனவரி-மீ சஞ்சிகை முதல் பத்திரிகை அனுப்பப்படும். பதில் விரும்புவோர் தபால் முத்திரை அனுப்பவேண்டும்.

### விளம்பர விகிதம்.

| | | |
|---|---|---|
| ஒரு தடவைக்கு | முழுப்பக்கம் | ரூ. 5—0—0, |
| ,, | அரைப்பக்கம் | ரூ. 3—0—0. |
| ,, | கால்பக்கம் | ரூ. 1—8—0. |

N. B:— நீடித்து விளம்பரஞ்செய்வோர் எமக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்.

விலாசம்:— மானேஜர்,
சித்தன்,
பழனி, S.I

# "சித்தன்"

## பழனி.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்"

## மாதாந்தப் பத்திரிகை.

ஆசிரியர்— C. P. சாமி.

| | | |
|---|---|---|
| மாலை 1. | பிப்ரவரி 1935. | மணி 2. |

"மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நில மிசை நீடுவாழ்வார்". (குறள்)

பெருவெளியா யைம்பூதம் பிறப்பிடமாய்ப் பேசாத
பெரிய மோனம்

வருமிடமாய் மனமாதிக் கெட்டாத பேரின்ப
மயமாய் ஞானக்

குருவருளாற் காட்டிடவு மன்பரைக்கோத் தறவிழுங்கிக்
கொண்டப் பாலுந்

தெரிவரிதாய்க் கலந்தநெந்தப் பொருளந்தப்
பொருளினையாஞ்
சிந்தை செய்வாம்.

(தாயுமானவர்.)

89917
சென்னை-600 008

# சங்கங்களும் பத்திரிகைகளும்.

ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்குந் தாழ்வே

(பாரதி)

அநேகமாக மேனாடுகளெல்லாம் சுதந்தரவாழ்வு பெற்றுச்சுயமரியாதை குன்றாத சுகபோகத்தில் திளைக்கின்றன. ஆனால் நமது போகபூமி என்று வருணிக்கப்படும் இந்தியாவின் தலையெழுத்து வேறுவிதமாயிருக்கிறது. கஞ்சிக்கும் துணிக்குமே ஏங்கிப்பிறர் தயவை நாடி நிற்கிறது. சொந்தப் பெயர் எழுதத்தெரியாதவர்கள் கோடிக்கணக்கானவர்கள் என்றால் வேறு என்ன கூறவேண்டும்? மேனாட்டு நாகரீக வெள்ளம் மக்கட்கு உறுதியான பற்பல சிறப்பியல்புகளோடு இவ்வளவுகாலம் உரமாகப்பாய்ந்தும் நமது பாமரமக்களிடை அடர்ந்திருக்கும் குருட்டு நம்பிக்கைப் பழக்கவழக்கக் குப்பை செத்தைகளை நனைத்ததாகக்கூடக் காணமுடியவில்லை. நமது பாட்டன் பூட்டன் வாழ்ந்த பழம்பெருமைகளைப் பேசிக்கொண்டு வீணே காலங்கழிப்பதிற் பலனில்லை. வறுமை, பிணி, அறியாமை நம்மைப் பிடுங்கித்தின்றுகொண்டிருக்கின்றன. இவற்றை நீக்க வழிதேடாமல் உலகத்தில் நமக்கு வேலை என்ன? இந்தக்கொடு வியாதிகளை வேரோடு அறுக்கும் மருந்து தக்க கல்விமுறையாலாகிய அறிவு விளக்கமும் உலகியல் உணர்ச்சியும் ஐக்கிய பாவமுமேயாகும். இவை நமக்குக்கிடைக்கவொட்டாமல் தடைசெய்வன நடைமுறையில் ஆழமாக வேரூன்றி இருக்கிற பொருளற்ற ஒழுக்க வழக்கங்களேயாகும். ஆகையால் அவற்றை தாட்சணியம் காட்டாமல் ஒழித்தாகவேண்டும். தற்காலத்தில் நமது நாடு கட்டுக்குலைந்து தட்டுக்கெட்டு நிற்கிறது. கடவுளின் பேரால், மதத்தின் பேரால், ஜாதியின்பேரால், ஒருவரையொருவர், ஒரு சமூகத்தை மற்றொரு சமூகம்



வெறுத்துக்கொண்டு தனித்தனி பிரிந்து வருந்துகின்றோம். நமது அரிய சக்தி பலவாறு சிதறியிருக்கிறது. இதை ஒன்று சேர்த்து ஒருமுகமாகப் பிரயோகிக்கவேண்டியதே நமது முதற்கடமையாகும். இது நாட்டுப்பொதுவிஷயம்; எல்லாரும் கூடவேண்டும் பேசவேண்டும்; தக்க அறிஞர்களின் ஆலோசனையையும் ஆதரவையும் நாடவேண்டும். இக்காரியத்திற்கு சங்கங்களும் சமாசாரப் பத்திரிகைகளும் தலைசிறந்த சாதனங்களாயிருக்கின்றன. இக்காலத்தில் இவையின்றி எதையும் அணுவளவும் சாதிக்கமுடியாது. மேனாடுகளும் கீழ்திசை ஜப்பானும் இவ்வளவுதூரம் உன்னதநிலைமைக்கு வந்ததின் இரகசியம் என்ன? சங்கங்களும் பத்திரிகைகளுமேயாகும். நமது நாட்டில் இவற்றின் பயன் இன்னும் நன்கு அறியப்படவில்லை. ஜாதி சமயம், ஆசாரம், மொழி, சுயமரியாதை, நலவுரிமை, வியாபாரம், விவசாயம், கைத்தொழில், ஐக்கியம் ஆகியவற்றின் பேரால் பற்பல சங்கங்களும் பத்திரிகைகளும் தோன்றிக்கொண்டுதானிருக்கின்றன. இவற்றுள் தோன்றின தினமே அழிவனவும், தோன்றிநின்று அழிவனவும், ஆண்டுக்கொருமுறை தூக்கத்தினின்றும் எழுவனவும், பேர்மாத்திரையாயுள்ளனவும் பலவாகும். இது விஷயத்தில் மேனாடுகளில் இந்தமாதிரி மோசமான நிலைமை காண்பது மிக மிக அரிதாகும். ஏன்? இல்லையென்றே சொல்லலாம்.

மேனாட்டார் மேற்கொண்டிருக்கிற உயர் நோக்கங்களையும், காரியங்களையும், சங்கங்களின் மூலமாகவும், பத்திரிகைகளின் மூலமாகவுமே எளிதிற் சாதித்துக் கொள்ளுகின்றனர். அரசாங்கத்தையே திடுக்கிடச்செய்யும் ஆற்றல்வாய்ந்த பத்திரிகைகளெல்லாம் அங்கே இருக்கின்றன. நமது நாட்டில் பத்திரிகையென்றால் ஒரு விபரீத உணர்ச்சி பாமரமக்களிடை இருந்துவருகிறது. அதாவது மாட்டு வயிற்றில் மனிதப்பிறவி, இரண்டு தலை மூன்று காலோடு குழந்தை பிறத்தல் முதலிய விபரீத அதிசயச் செய்திகளும், பொய்யும், புரட்டும் சொல்வதுதான் பத்திரிகைகள் என்று பெரும்பாலோர் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். இந்தத் திரிபுணர்ச்சிகளை அங்கங்கேயுள்ள படித்தவர்கள் சங்கங் கூட்டிப் போக்கவேண்டும். கூட்டங்கூடிக் கட்டுப்பாடாக

விஷயாலோசனை பிரசாரம் செய்யும் முறை நம்மவர்க்குப் புதிய துறையல்ல. இன்றைக்கும் கிராமங்களிலும், பிறவிடங்களிலும், ஜாதிக்கூட்டங்களும், ஊர்ப்பொதுக்கூட்டங்களும் நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன. அவை ஜாதியாசாரத்தகராறு, சாமி சாட்டுதல்களோடு நின்றுவிடுகின்றன. நமது சமூக முன்னேற்றத்திற்காகச் செய்ய வேண்டிய காரியங்கள் அளவு கடந்திருக்கின்றன. தினக் கூட்டம் போட்டுப்பேசினாலும் நமது குறைகளை உள்ளவாறு சொல்லிமுடிக்க பல வருடங்கள் வேண்டும். கிறிஸ்துவ மதப்பிரசாரகர்களாகிய மிஷனரிகளை உற்று நோக்குங்கள். எங்கேயோ பிறந்து வளர்ந்தவர்கள் இங்கே வந்து அபார வேலைகளைச் சாதித்திருக்கின்றனர். மத வைராக்கியம் செறிந்த இந்தியாவில் கோடிக்கணக்கானவர்களைத் தங்கள் மதத்தில் சேர்த்துவிட்டனர். சேர்த்தும் வருகின்றனர். கிராமங்கள்தோறும் எத்தனை ஆரம்பப் பாடசாலைகள்! எத்தனை உயர்தரப்பாடசாலைகள்! எத்தனை கல்லூரிகள்! எத்தனை வைத்தியர்கள்! இவையெல்லாம் அவர்கள் ஜீவாதாரமாகக்கொண்டுள்ள ஐக்கிய தர்மத்தின் பலனல்லவா? நாம் தற்கால உலகப்போக்குக்கும் நமக்கும் தொடர்பில்லாமல் கவலையீனமாய் வாழ்ந்துவருகிறோம். இதை முதலில் கவனிக்கவேண்டியது படித்த கூட்டத்தாரின் செய்கையன்றோ! இது செம்மைப்படின் சுயராஜ்யம், சுதந்திரம் எளிதில் கிட்டும். பாமர மக்களாகிய திருப்பாற்கடலில் சங்கக்கூட்டங்களாகிய மந்தரகிரியை நாட்டி சொற்பொழிவு - கட்டுரைகளாகிய வாசுகியைப்பிணித்து அறிஞர்கள் - பத்திரிகைகளாகிய தேவாசுரர் கடைந்தால் சுயராஜ்யாமிர்தம் தானே பொங்கித்ததும்பாதா? ஆதலால் அன்பர்களே ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு சங்கத்தை ஸ்தாபித்து வாரம் ஒரு முறையேனும் கூடி தற்கால உலகில் உணர்ச்சிபெற முயற்சி செய்வோமாக.



# சுகாதாரப் பகுதி.

## நமது ஆகாரம்.

நமது தேகமெங்கும் பரவியிருக்கும் இரத்தமானது சுத்தமாயிருந்தாலொழிய நாம் சுகமாயிருக்கமுடியாது. அவ்வாறு இரத்தத்தை சுத்திகரிப்பது நமது ஆகாரமே. நாம் ஒவ்வொரு நாளும் வேலை செய்வதால் உடலின் அவயவங்கள் சோர்வடைகின்றன. அச்சோர்வை நீக்கி வேலை செய்ய சக்தியைக்கொடுப்பதற்கும், உஷ்ணத்தை உண்டாக்குவதற்கும், இரத்த ஓட்டத்தை பலப்படுத்துவதற்கும், சரீரத்தை வளரும்படி செய்வதற்கும் நாம் ஆகாரம் உட்கொள்ளவேண்டியிருக்கிறது. நம்மவர்களில் பலர் பலதறப்பட்ட ஆகாரங்களை உட்கொண்டாலும் பொதுவாய் அவைகள் ஜீவசத்துப் பொருள்கள் உள்ளவைகளாய் இருத்தலே உடலுக்கு நன்மை பயப்பவை எனச்சொல்லலாம். ஜீவசத்து குறைவதாலேயே வியாதிகள் உண்டாகக் காரணமாகிறது. ஜீவசத்துப் பொருள்களுள்ள ஆகாரங்கள்:-அரிசி, கேழ்வரகு, கோதுமை, துவரை, உளுந்து, பால், தயிர், மோர், வெண்ணெய், நெய், பட்டாணி, மரக்கறிகள், ஆரஞ்சு, எலுமிச்சை, சீமைத்தக்காளி, திராக்ஷை, முட்டைக்கோஸ், கீரை, கிழங்குகள், முட்டை, மீன், மாமிசம் முதலியன.

இவைகளில் சதையை வளர்க்கும் சத்துள்ள ஆகாரம், உஷ்ணத்தை உண்டாக்கக்கூடிய ஆகாரம், எலும்பை வளர்க்கும் ஆகாரம் முதலியவைகள் இருப்பதால் ஒரே பொருளை உட்கொண்டு சரீரத்திற்கு வேண்டிய யாவும் பெற முடியாதாதலால் மேற்சொன்ன பொருள்கள் கலந்த ஆகாரமே சிறந்தது.

அரிசி, கோதுமை முதலியவற்றை நன்றாய் தீட்டிவிடுவதால் அதன் சத்துக்களெல்லாம் போய் சாரமற்றதாகி

விடுகின்றன. கையினுல் குத்தப்பட்ட அரிசியிலிருக்கும் ஆகாரக்குணம் இயந்திரத்தால்குத்தப்பட்டவைகளில் காண முடியாது. தவிர அரிசியை உலையில் போடுமுன் நன்ருய் கழுவிவிடுவதாலும் வெந்தபின் கஞ்சியை வடித்துவிடுவதாலும் மீந்துள்ள சத்தும் குறைந்துவிடுகிறது. ஆதலால் ஆகாரக்குணம் மிகுந்துள்ள வேறு பண்டங்களையும் சேர்த்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.

நாம் சாப்பிடும் ஆகாரத்தை நன்கு மென்று நாக்கின் கீழ் ஊறுகின்ற உமிழ் நீருடன் சேர்த்து அரைத்துச்சாப்பிடாவிட்டால் அது ஜீரணியாமல் வியாதியை உண்டாக்கும். நம்மில் அனேகர் ஆகாரத்தை உருண்டையாக வாய்க்குள் போட்டு விழுங்குகிருர்கள். இவர்கள் சாப்பாட்டில் உட்கார்ந்தால் இரண்டே நிமிஷத்தில் உள்ளே தள்ளிவிட்டு எழுந்துவிடுகிருர்கள். இம்மாதிரி செய்வதாலேற்படும் கெடுதல்களை இவர்கள் அறியார்கள்போலும்! ஆகாரத்தை அப்படியே விழுங்குவதால் இரைப்பைக்கும் சிறு குடல்களுக்கும் தங்கள் தொழிலைச்செய்ய சமயம் வாய்க்கிறதில்லை.

தவிர முதலில் சாப்பிட்ட ஆகாரம் ஜீரணமாகாதிருக்கும்போது மறுபடியும் சாப்பிடுவதால்கேடு விளையுமன்றோ? நன்ருய் வேகாததும், அழுக்குள்ளதுமான பதார்த்தங்களை சாப்பிடக்கூடாது. 'அளவிற்கு மீறினுல் அமிர்தமும் நஞ்சாகும்' என்றபடி எதுவும் அளவோடு சாப்பிடவேண்டும். மனதின் சக்தியாலும் ஜீரணநீர்கள் சுறக்கிறபடியால் ஆகாரம் உட்கொள்ளும்போது மனம் உல்லாசமாய் இருத்தல் வேண்டும்.

கோபமாவது விசனமாவது இருக்குமானுல் இந்த நீர் சுறப்பது தடைப்படும். ஆகையால் உண்போர் தங்கள் எண்ணங்களையும் கவலைகளையும் விட்டுவிட்டு கோபங்களை ஒழித்து உற்சாகத்துடன் ஆகாரத்தை உட்கொள்ள



வேண்டும். ஆனுல் சில வீடுகளில் வேலையினிமித்தம்சென்ற புருடன் வீட்டுக்கு வந்து சாப்பிட உட்கார்ந்ததும் மனைவியானவள் தன் குறைகளையும், தனக்கு வேண்டிய சாமான்களையும், வீட்டுக்குரிய சாமான்களைப்பற்றியும் சொல்வது வழக்கம். அவன் வயலில் பயிர்கள் மழையின்றி காய்ந்திருப்பதைக்கண்டு இவ்வருஷ விளைவில் தனக்குற்ற நஷ்டத்தை எண்ணியோ, வியாபாரம் மந்தமானதுபற்றியோ, பணக்கஷ்டத்தாலோ, கடன்காரர் தொல்லையாலோ வேறு எக்காரணத்தாலோ கஷ்டப்பட்டு பசியுடன் வீடுவந்து சாப்பிடுஞ்சமயத்தில் மேற்சொன்னவைகளைக்கேட்டால் கோபந்தானே வரும். இதை உணராத பெண்கள் அறிவிலிகள் அன்ருே! இம்மாதிரி மன சமாதானமின்றி சாப்பிட்டுவந்தால் ஜீரணக் கருவிகள் வேலைசெய்யாது போய்விடும். அதனுல் வியாதிகள் உண்டாகி அற்ப ஆயுள் உள்ளவர்களாகின்றனர். பெண்மக்கள் இனியாவது இவ்வவதூறுக்காளாகாதிருப்பார்களாக.

ஜீரணம் செவ்வனே உண்டாகவேண்டுமானுல் சந்தோஷத்துடன் சாப்பிடவேண்டும். போஜனகாலத்தில் அவசரம், கோபம் வேறு சிந்தனை இருத்தல் கூடாது.' இதனுல் அன்ருே "விருந்தோடுண்" என மொழிந்தனர் முதியோர். மாமிச ஆகாரம் சரீரத்திற்கு ஏற்றதல்ல எனச்சிலர் கூறுகின்றனர். அவ்வாறு கூறுபவர்கள் அவ்வாகாரத்தின் தன்மையை அறியாதவர்கள் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. உஷ்ண நாடுகளிலுள்ளவர்கள் மாமிசத்தைச் சிறிதளவே உட்கொள்ளவேண்டும். ஆனுல் மாமிச ஆகாரத்தில் வெறுப்புள்ளவர்கள் அதைச் சாப்பிடவேண்டுமென்ற அவசியமில்லை. அவர்கள் பால், நெய் போன்ற சத்துள்ள பதார்த்தத்தை அதிகமாய்ச் சேர்க்கவேண்டும். ஆகார விஷயத்தில் மேற்கூறியவைகளைக் கவனித்து அதன்படி நடந்துவருவார்களானுல் அவர்கள் நீடூழி வாழ்வார்கள்.

# The Seven Ages Of Man.

## மானிடரின் ஏழு பருவம்.

(ஷேக்ஸ்பியர்.)

(29-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

சித்தமா இருக்கும் யுத்தவீரன் — பின்
செழிப்புறு சேவற் கொழுப்பினால் ஆகிய
பேரெழில் வாய்ந்த பேழைபோல் வயிறும்
நிர்த்தாட் சண்ய நேத்திரம் இரண்டும்
வழங்கும் காலத் தொழுங்கின் படியே
கறுக்கிய தாடியும் முறுக்கிய மீசையும்
நல்லுப தேசமும் நாடறி வழக்கும்
இன்ன யாவும் இனிதுறக் கொண்ட
பண்பார் நீதி பதி — அதன் பின்னர்
கச்சல் தேகமும் கால்களிற் சோடும்
மூக்கிற் றரித்து நோக்குகண் ணாடியும்
இருகவுள் தோலாம் இரும்பை வீழ்ச்சியும்
பாலியத் தினிது பத்திரப் படுத்திய
பேற்சோ டிரண்டும் மிகப் பெரிதாம்படி
ஒடுங்கிச் சுருங்கிய ஓரிரு பாதமும்
ஆண்மைப் பெருங்குரல் அனைத்தையும் இழந்து
குழவியின் குறுகிய குரலினைப் போன்று
கீச்சென ஒலிக்கும் பேச்சையும் கொண்டு
தேசெலாம் குன்றிய மாசுலாம் குரூபியே
ஆறும் பருவம் ஆம். அதன் பின்னர்
பல்லும் பார்வையும் சொல்லும் சுவையும்
யாவையும் இழந்து யாவையும் மறந்து
மறுவலும் சேயென மதித்தளர்வு எய்துவோன்.
அடிக்கடி மாறும் இவ் அற்புத சரிதை
முடியும் இக் காட்சியொடு முடிந்திடுமே



# பழனிஸ்தல வழிகாட்டி.

(கோவை, சி. கு. நாராயணசாமி முதலியார்.)

(18-ம் பக்கத்தொடர்ச்சி.)

## குமரனடியார்களும் திருப்பணிகளும்.

சேரர்கோனும், விஜயநகர அரசர்களும், மைசூர்க்கர்த்தர்களும், மதுரை நாய்க்க மன்னர்களும், பழனி, வாலசமுத்திரம், சமுத்தூர் முதலிய ஜமீன்களும், பழையகோட்டை, நெய்க்காரபட்டி, பெரியபட்டியாதிய ஊர்களின் பெரும் பிரபுக்களும், தண்டபாணியின் திருவாலயம் சீர்பெற்று மேன்மையுடன் திருப்பொலிந்து திக்கெலாம் புகழ்ந்து, சிறந்து விளங்குவதற்கு உறு துணைவராய், உண்மை அன்பராய், திருப்பணி செய்வதற்குத் தகுதிவாய்ந்த செல்வராயிருந்து பேருதவி புரிந்தார்களென்று கன்ன பரம்பரையாலும், வரலாற்றுச் செய்தியாலும் அறியப்படுகின்றது. கல்வெட்டுக்களினின்றும், புராண வரலாற்றிலிருந்தும், கன்னபரம்பரையாலும் பண்டைய ஆலய நிர்மாணமும், தண்டபாணியின் சிலாவிக்கிரகப் பிரதிஷ்டையும், ஜீரணோத்தாரணமும், ஆறு கால பூஜைகளுக்குரிய சாதனங்களும், சேரர்கோனாலும், ஒபளக்கொண்டநாய்க்கன் அய்யன் அவர்களாலும் அவர்களது சந்ததியார்களாலும், மற்றும் மெய்யன்பர்களாலுமே செய்யப்பட்டதென்று அறியப்படுகின்றதேயன்றி முறையாய் காலக்கணக் கோடுங்கூடிய முற்றிய வரலாறாய் அறியுமாறில்லை. பழநி தண்டபாணியின் ஆலய நிர்மாண ரகசியம் புராணக் கதையைப் பெரும்பாலும் தழுவியுள்ளதென்பதே நமது கருத்து.

## ஆலயமும் பக்தியும்.

கோயில்கள் நிறைந்தது கோமளமான நமது தண்ட

மிழ் நாடு. இந்தியமக்களுக்குள்ள ஈஸ்வர பக்தி மற்றெவர்க்கும் இல்லையென்று அறுதியிடும் உறுதியுடன் மலைமேல் நின்றும் மார்தட்டிக் கூறலாம். தெய்வ வழிபாட்டிற்கு ஒரு சிறிதும் குறைவு நேராவகை அதன் வளர்ச்சியில் ஊக்கங் காட்டி நின்றதும், நிற்பதும் இந்திய மக்கள் நிறைந்த பாரத நாடே என்பதில் எட்டுணையும் ஐயமின்று. இங்ஙனம் அன்பிற்கும் ஆலயவழிபாட்டிற்கும் ஏற்றம் பெற்றிருந்த காரணம்பற்றியே தேவாரம் பாடிய சமயாசாரியர் நால்வரும் நாலாயிரப்பிரபந்தம் பாடிய பன்னிருவரும் தோன்றிப் பக்தி மணத்தைப் பாரெங்கும் பரப்பினர் எனலாம். சிவன், திருமால், முருகன் முதலிய தெய்வங்கள்பால் மக்களுக்கு அன்பு மிகுதிப்பட்டதனாலன்றோ தமிழ்நாடு தவநாடாயிற்று. மேல் நாடுகளிலும், திசைநாடுகளிலும், நாடகசாலைகளும், சினிமாக்காட்சி மேடைகளும் ஆயிரக்கணக்க்காயிருக்க இந்திய நாட்டில் சிற்ப சித்திரங்கள் நிறைந்த ஆலயங்கள் கோடிக்கணக்காக மேம்பட்டன. பக்தர்கள் வெள்ளத்திற்படிந்து பரமனைப் பராவும்போது யுக்தியுடன் அவற்றின் சீர்திருத்தங்களில் சிரத்தை செலுத்துவது நலம். பக்திக்கும் யுக்திக்கும் ஒவ்வொரு காலத்தில் முரண்பாடெய்தும். எனினும் பக்தியை மட்டும் கைவிடுதல் பண்புடைத்தன்றாம். இவ்விரண்டையும் ஒரு வழிப்படுத்தி நடைமுறையில் சாதகமாய் இலங்குவதற்கு இந்தியனாய்ப் பிறந்த ஒவ்வொரு ஆண்மகனும் முயற்சி மேற்கொண்டு முனைந்து நிற்பது மறவாக் கடமை என்பதைத்தமது மனதில் பதித்தல் வேண்டும்.

## முருகனே பண்டையகாலத்து முன்னறி தெய்வம்

மிகப்பழமையான காலத்தில் தமிழகத்தில் விளங்கிய புலவர் திலகமாகிய நக்கீரனார் பாடிய திருமுருகாற்றுப்படையில் வியந்தோதப்பட்ட தெய்வம் 'திருமுருகனே'யாமென்



பது தமிழ் கற்றார் யாவரும் அறிந்ததே. இதனால் இக்கடவுளை நமது முன்னோர்கள் "கண்கண்ட தெய்வம்," "பண்டுதொட்டே பழைய தெய்வம்," "தமிழ்ப்பெருந்தெய்வம்" என்று பலவாறு சிறப்பித்துக் கொண்டாடித் தொழுதுவந்தனர், வருகின்றனர். இத்தெய்வம் என்றும் மாறாத இளமையுடையதால் 'முருகன்' என்று பெயர் சிறந்ததென்ப. மற்றும், முருகனுக்குரிய அபிதானம் ஆயிரத்திற்கதிகமாம். அவற்றில் சிலவற்றை அன்பர்கள் அறியுமாறு இதன் கீழ் தருகிறோம். அவை:- அரன்மகன், ஆறுமுகன், (ஷண்முகன்) ஆசான், ஆண்டலைக்கொடியுயர்த்தோன், கடம்பன், கங்கைமைந்தன், கார்த்திகேயன், காங்கேயன், குமரன், குகன், குழகன், குறிஞ்சிவேந்தன், சரவணபவன், சாமிநாதன், சிலம்பன், சூர்ப்பகைவன், செவ்வேள், செட்டி, சேய், சேந்தன், தாரகற் செற்றோன், தெய்வயானைகாந்தன், புலவன், மஞ்ஞையூர்தி, மான்மருகன், வள்ளிமணாளன், வரைபகவெறிந்தோன், விசாகன், வேள், வேலினுக்கிறை என்பன.

இனி முருகு என்ற சொல்லை கவனிப்பாம். 'முருகு' என்பதற்கு வாசனை என்று பொருள். வையகத்துள் மணத்தோடு வாழவேண்டுமென்பது யாவருக்கும் விருப்பம். அவ்விருப்பத்தின் உட்கருத்து கௌரவமாக இருக்கவேண்டும் என்பதே. மற்றும் முருகு என்ற பதத்திற்கு 'இளமை' என்றும் ஓர் அர்த்தமுண்டு. முற்கூறியவாற்றாலும், இவ்விளமைப் பொருளாலும் அதனையுடையான் முருகன் எனப்பட்டான். உலகம் முழுதும் ஈன்றும், 'பச்சிளங்கன்னி' என்று பெயர் பெற்ற பார்வதியாரைப்போலவே குமரவேளும் 'முருகன்' எனப்பெயர் சிறந்து விளங்குவானாயினன்.

'வேள்' என்ற சொல்லுக்கு மன்மதன் என்பது ஒரு பொருள். மன்மதன்—அழகுடையவன். முருகன் மதனினும் விஞ்சிய எழிலுடையவனானதால் வேளினும் வேறாகச்

'செவ்வேள்' என்று சிறப்புப் பெயர் பெற்றான். மதனனுக்குரிய பெயர்களுள் 'கருவேள்' என்பதும் ஒன்று.

சாமி, பெரியோன், கடவுள், தலைவன் என்ற பெயர்களும் முருகனுக்குண்டு. படைப்புக்கடவுளாகிய பிரமனைச் சிறையிலிட்டும், நந்திதேவர் முதலிய சிவகணத்தலைவர்கள் சிறைவிடுமாறு கேட்டும் விடாமலும், விண்டுவாதிய தேவர்களால் அழிக்கமுடியாத அசுரர்களை அழித்து வெற்றிகண்டு கடவுளுக்கும் கடவுளாயிருந்த காரணத்தால் முருகவேள் சாமி என்று பெயர்சிறந்தான்.

"கண்கண்ட தெய்வம்" என்று யாவராலும் போற்றப்படுவது. "வேண்டுவார் வேண்டியாங்கெய்தினர்" என்று விதந்தோதிய வித்தகரது உண்மை வாக்குப்பொய்யாதவண்ணம் அன்பர் விரும்பியதை விரும்பியவாறு விரைந்தளிப்பவன். முன்னும், இக்காலத்தும், இனி வருங்காலத்தும் வேள்முருகனே என்பது விளங்க அவன் கண்கண்ட தெய்வமென்று புகழ்ந்தோதப்பட்டான்.

தமிழ்ப்பெருந்தெய்வம் என்று கூறப்பட்டது உலகப்பற்றை முனிந்த காரணத்தால் முனிவர் என்று பெயர். சிறந்த பலருள்ளும் முதல்வராக மதிக்கப்படுகின்ற அகத்தியனார் தமிழ்மொழிக்கு ஆதியில் இலக்கணம் செய்தார் என்றும், அவர் முருகபிரானிடத்து தமிழ்கேட்டனர் என்றும் வரலாற்று உண்மையாலே முருகவேள் தமிழ்த்தெய்வம் என்று சிறப்பிக்கப்பட்டான்.

(தொடரும்.)



# தீர்க்காயுள் பெற மார்க்கம்

## 140-ஆண்டு வாழலாம்.

### டாக்டர். வாரனோப் புத்திமதிகள்.

மனிதன் நெடுநாள் வாழ்வதற்கு குரங்கின் 'கிலான்ட்ன்ஸ்' என்ற தசையை மனித கிலான்ட்ஸோடு' ஒட்டவைத்தல் என்ற புதிய சிகிச்சை முறையை கண்டுபிடித்த டாக்டர். வாரனோப் சமீபத்தில் பம்பாய் வந்திருந்தார். அவர் ஜாவாவிற்குப் புறப்படுமுன் ஸ்ரீ. டி. சி. ஷா அவரை பம்பாய் "தாஜ்மஹால்" ஓட்டலில் கண்டுபேசினார். டாக்டரின் புதிய முறையை விட்டுவிட்டு இயற்கை முறையில் மனித ஆயுளை எப்படி நீடிப்பதென்பதைப்பற்றி முதலில் பேசினர்.

### நூறாண்டு வாழ்வதெப்படி?

சுகாதார விதிகளைத் தவறாமல் வாழ்ந்து, திறந்தவெளியில் வசித்தும், வேலை செய்தும் வந்தால் மனிதன் நூறு ஆண்டு வாழலாமென்று டாக்டர். வாரனோப் அபிப்பிராயப்பட்டார். நூறாண்டு வாழ்வதற்கு, தகுந்த தேகப்பயிற்சியும், சரியான உணவும் தேகசுகத்தைப் பாதிக்கக்கூடிய கவலைகளையும், அதிக உழைப்பையும் நீக்குதலும் அவசியமாம். பல்கேரிய நாட்டின் விவசாயிகள் திறந்தவெளியில் சுகாதார விதிகளுக்குப் பழுதேற்படாதபடி வாழ்வதால், அவர்கள் மிகுந்த தேக சுகத்தையும், நீண்ட ஆயுளையும் பெற்றிருக்கிறார்கள் என்று கூறினார்.

### மோரின் உபயோகம்.

மனிதனது பெருங் குடலில் வளரும் ஒருவித விஷக்கிருமி, ரத்தத்தை விஷமாக்குவதால் தசைகள் தளர்ந்து கிழப்பருவம் மேலிடுகிறது; அக்கிருமிகளைக்கொல்ல ஏற்ற மருந்து தயிர் அல்லது மோர், என்று டாக்டர். மெட்ச்னிகோப் என்ற பிரஞ்சு சாஸ்திரி கூறுகிறார். அது உண்மை

யாவென்று டாக்டர் வாரனோப்பை ஸ்ரீ ஷா கேட்டார். "இவ்வபிப்பிராயம் சாஸ்திரரீதியானதே. பால் தயிராகத் தோய்கிறபோது உண்டாகும் கிருமிகள் நமது பெருங்குடலில் வளரும் விஷக்கிருமிகளை அழித்து விடுகின்றன. தயிர் அல்லது மோர் சாப்பிடுவது தேக ஆரோக்கியத்திற்கும், நீண்ட ஆயுளுக்கும் நல்லது" என்று டாக்டர் பதிலளித்தார்.

ஆயுளை நீடிப்பதற்காக அவர் கண்டுபிடித்துள்ள புதிய முறையைப்பற்றி பேசினார். நவ நாகரிகத்தின் செயற்கை வழிகளில் வாழ்கின்ற பலர் பூரண ஆரோக்கியத்தையோ, தேக திடத்தையோ அனுபவிப்பதில்லை. இயற்கையோடியைந்த சுகாதார விதிகளுக்குட்பட்ட வாழ்க்கையின் மூலம், மனிதன் எவ்வளவு நாள் வாழமுடியுமோ அவ்வளவு நாள் இக்கால மாந்தர் வாழ்வதில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு ஓர் அரு மருந்தாக அவரது புதிய முறை இருக்கிறதாம். தன்னுடைய முறைபால் மனிதனை நூறாண்டு வாழச்செய்வது அனுபவ சாத்தியமென்று அவர் கூறுகிறார். வருங்காலத்தில் தனது முறையை அபிவிருத்திசெய்து, மனிதன் 140-ஆண்டுகளாவது வாழும்படி செய்யலாமென்று அவர் நம்புகிறார். அவருடைய சிகிச்சை ஆயுளை வளர்ப்பதற்கு மாத்திரமல்ல; உறுப்புகளுக்கு புதிய வலிமையைக் கொடுக்கவும் பயன் படுமாம். அதனால் தேக ஆரோக்கியமும், திடமும் பெருகுமாம். அதன் பலன்களை அவர்களுடைய குழந்தைகளும் ஓர் அளவு அனுபவிக்கலாம்.

## அவரது சிகிச்சை முறை.

உடல் உறுப்புகளெல்லாம் நம் தேகத்திலுள்ள 'கிலான்ட்ஸ்' களாலேயே இயங்குகின்றன. சுகாதாரமற்ற முறையில் வாழ்ந்தால், இக்கிலான்ட்ஸ்கள் பலவீனப்பட்டு தேக திடத்தைக்குறைக்கின்றன. இக் குறைவு மிகுவதாலேயே கிழப்பருவமும், மரணமும் அண்டுகிறது. மனிதன் உடலிலுள்ள 3-கிலான்ட்ஸ்களுக்குமேல் குரங்கின் உடலிலுள்ள அதே கிலான்ட்ஸ்களை ஒட்டவைத்துத் தைப்பதே அவரது சிகிச்சைமுறை. கழுத்தின் முன் பக்கத்திலுள்ள 'தைராய்ட்' கிலான்ட்ஸ், பின் பக்கத்திலுள்ள 'பிசுடரி' கிலான்ட், ஆண், பெண் மர்மஸ்தான கிலான்ட் ஆகியவை.



களை சிகிச்சைக்காக உபயோகப்படுபவைகள். இவற்றை அகற்றிவிடுவதால் குரங்குகள் இறந்துவிடுவதில்லை. அது அலியாக மாறிக்கொழுத்துவிடும்; அவ்வளவுதானாம்.

இந்த சிகிச்சைக்காக குரங்குகளில் நான்கு இனத்தவைகளை பயன்படுமென்று அவர் கூறுகிறார். அவைகளுடைய ரத்தந்தான் மனித ரத்தத்திற்கு ஒத்திருக்கிறதாம். ஆனால் ஆப்பிரிக்காவிலுள்ள 'கொரில்லா' இனக்குரங்குகளின் இரத்தத்தால் மூர்க்க குணம் மிகுவதால் அது பயன்படாதாம். 'சிம்பன்ஸி' குரங்குகளைத்தான் இச்சிகிச்சைக்கு உபயோகிக்கிறார்கள். ஜாவா, சுமத்திரா தீவுகளிலிருக்கும் 'உராங்குட்டான்' குரங்குகளையும், சையாமிலிருக்கும் கிப்பன் குரங்குகளையும் இன்னும் பரிசோதித்துப் பார்க்கவில்லையாம். அவை பயன்படுமா என்று சோதிக்கவே டாக்டர் வாரனோப் இப்போது அந்நாடுகளுக்குச் செல்கிறார்.

டாக்டர் வாரனோப் தன் சிகிச்சைமுறையை 1920-ம் வருஷத்தில்கண்டுபிடித்தபோது, அதனால் ஏற்பட்ட பலனைவிட, சென்ற 5-வருஷங்களில் அதில் அவர் செய்த அபிவிருத்தி அதிக பலனைக் கொடுத்திருப்பதாகக் கூறுகிறார். பாரிஸில் மாத்திரம் 1000-பேருக்கு சிகிச்சை செய்திருக்கிறாராம். அவருடைய மாணவர்கள் இப்போது பல நாடுகளில் இச் சிகிச்சையை நடத்திவருகிறார்களாம். இச் சிகிச்சைசெய்யும்போது நோயாளிக்கு 'க்ளோரோபாரம்' முதலிய மயக்க மருந்துகள் கொடுக்கவேண்டியதில்லையாம். யாதொரு வலியுமிராதாம்.

## எவ்வளவு தூரம் நிற்கும்?

இச் சிகிச்சையை செய்துகொண்டபின் எப்படி வேண்டுமானாலும் வாழலாமா? அதனால் ஒன்றும் பாதகமில்லையா? அதுதான் இல்லை. இச் சிகிச்சைக்குப்பின் எவ்வளவுக்கெவ்வளவு சுகாதாரமற்ற வாழ்க்கை நடத்துகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அதன் பலனும் குறைந்துவருமாம். சரியான முறையில் வாழாவிட்டால் அப்பலன் வெகு சீக்கிரத்தில் பாழாகிவிடுமாம். புதிய பலத்தை வெகுசிக்கனமாகவே உபயோகிக்கவேண்டும் என்கிறார். விரயஞ்செய்யக்கூடாதென்பதே அவரது புத்திமதி. ஜாக்கிரதையாக வாழ்ந்து

வந்தால் சிகிச்சையின் பலம் 10, 12வருடங்கள்வரை இருக்கும் என்கிறார். அதற்குப்பின் மீண்டும் சிகிச்சை செய்துகொள்ளவேண்டுமாம்.

## தலை விதி.

ஒருவன் இத்தனை வருஷந்தான் வாழவேண்டுமென்று அவன் தலையில் ஏற்கனவே எழுதியிருந்தால் இச்சிகிச்சையால் அதைஎப்படி மாற்றிவிடுவதென்பதே அடுத்தகேள்வி. மனிதன் இவ்வளவு காலந்தான் வாழவேண்டுமென்று 'பிரம்மன்' எழுதிவிட்டானென்பதை நம்ப முடியாதென்று அவர் கூறினார். அது உண்மையென்றாலும் விதியை மதியால் வெல்லலாமென்று அவர் கருதுகிறார்.

## மகாத்மா கொள்கை.

பின்னர் கல்யாணத்தைப்பற்றி பேச்சுநடந்தது. உத்த வயது வந்தவர்கள் பிரம்மசாரிகளாய் இருப்பது மிகக் கேடு விளைவிப்பது என்று வாரனோப் கூறினார். மனித உடலின் இயற்கை உணர்ச்சிகளை, அதுவும்பால் உணர்ச்சிகளைப் பூர்த்திசெய்வது கெட்டதல்ல. 20-வயதான பிறகு ஆண்கள் எவ்வளவுசீக்கிரத்தில் மணஞ்செய்துகொள்கிறார்களோ அவ்வளவு தேகாரோக்கியத்திற்கு நல்லது என்று அவர் கூறுகிறார்.

மணமே செய்துகொள்ளாமல் இருக்கவேண்டுமென்றும், மணமானவர்களும் ''பிரம்மசரியத்தை'' க் கைக்கொள்ள வேண்டுமென்றும் மகாத்மா காந்தி சொல்வதை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. தனக்கு மகாத்மாவிடம் அதிக மரியாதை உண்டென்றும், ஆனால் இவ்விஷயத்தில் அவர் கூறுவதை ஒப்புக்கொள்ள முடியாதென்றும் அவர் கூறினார்.

எல்லாத்துறைகளைப்போலவே ஆண் பெண் சேர்க்கை விஷயத்திலும் அமிதம், குறைவு இரண்டும் தேகாரோக்கியத்திற்கு ஆணியாகுமாம்.

— "தமிழ்நாடு."



# வைத்தியப் பகுதி.

## மூல வியாதி.

இவ்வியாதியானது ஆசனவளையங்களில் கிழங்கு முளைகளைப்போலும் வேர்களைப்போலும் மாமிச முளைகளை உண்டாக்குவதால் மூலவியாதி எனப்பெயர் பெறுகிறது. இது மகா கொடிய வியாதிகளில் ஒன்று எனச்சொல்லலாம்.

### வியாதியின் குணம்.

அபானம் கடுக்கும். மலத்தை யிறுக்கும். உடலில் உஷ்ணம் மீறிய காரணத்தால் அடி வயிற்றுள் புண்ணாகி சீழ் தோன்றி மலத்துடன் விழும். வயிறு வலிக்கும். அபானத்துள் தசைபோல் வளர்ந்து மலவாயை சுருக்கிக் கொள்ளும். மலத்தோடு இரத்தம் கலந்து வரும். தேகம் வரவர மெலியும். உடல் சத்துக் குறையும். அஸ்திரில் அணலேறி பவனவாயிற் கத்திபோல் சதை வளர்ந்து உள்ளும் புறமுமாயிருக்கும். சகிக்கமுடியாதபடி நோவுண்டாகும். சில வேளைகளில் திணவெடுக்கும். வாயு எந்த நேரமும் நாபிக்குக்கீழ் வயிற்றில் ஒரு சத்தத்தோடு சஞ்சரிக்கும். ஆசனத் துவாரத்தைச்சுற்றிலும் சிறு சிறு கொப்பளங்கள் காணும், மலம் கழியும்போது சீதமும் ரத்தமும் விழும். தொப்புளைச்சுற்றி வயிறு வலித்து நொந்து மூலம் வெளியிற் றள்ளும். கைப்பையும் புளிப்பையும் தின்னப்பிரியம் உண்டாகும், அன்னஞ்செல்லாது. மலம் நுரைத்துப் பிசின் போல்வரும். பலம் குன்றி, மேல்மூச்சும், அசதியும் உண்டாக்கும்.

### வியாதியின் காரணம்.

தாய் தகப்பன் வழியாக பிறக்கும்போது கூடவே வருதலாலும், உஷ்ணத்தை விளைவிக்கும் பொருள்களை உண்

பதாலும், அதிகப் புணர்ச்சியாலும், வியாதியுள்ள பெண்களின் சேர்க்கையாலும் உண்டாகிற வெள்ளை முதலிய மேக ரோகங்களாலும், அக்கினி மந்தம், மலபந்தம் ஏற்பட்டு, மூலத்தில் வாய்வு உண்டாகி, அதன்மேல் அஸ்தியில் சூடு தாக்குவதாலும், நோவுடன் கொஞ்சங்கொஞ்சம் மலம் பிரயாசையாக வெளிப்பட்டதை ஆரம்பத்தில் கவனிக்காததாலும், மலம் கறுகி அல்லது தீய்ந்து கெட்டிப்பட்டதாலும் மூல வியாதி உண்டாகிறது. மலச்சிக்கலை மூல வியாதிக்கு முக்கிய காரணம் எனக்கொள்க.

## வியாதியின் வகை.

உள்மூலம், வெளிமூலம், இரத்தமூலம், சீழ்மூலம், வரட்சிமூலம், முளைமூலம், வாதமூலம், பித்தமூலம், சிலேத்ம மூலம், என ஒன்பது வகைப்படும். இது ஒவ்வொன்றையும் பற்றி விரிக்கிற் பெருகுமென வரையாது விடுத்தனம்.

மூலவியாதி ஆறுவிதமென்றும் சிலர் எட்டுவிதமென்றும் கூறுகின்றனர். சிந்தாமணிஎன்னும் ரோகநிதான நூல் மேற்கூறிய ஆறுவிதத்துடன் பகந்தர வியாதிகளையும் சேர்த்து மூலவியாதி இருபத்தொன்று என்றும் சொல்லுகிறது. அகஸ்தியர் குணவாகடம் 3000ல்

''அஞ்சான மூலமதிலுற்பவித்து
அசையாத மூலநோய் இருப தையா''

என்றும் கூறப்பட்டிருக்கிறது. இது தன்வந்திரி முதலானவர்களின் வாக்கியங்களுக்கு வேறுபடுகின்றன. இன்னும் மூலமுளைகள் உள்ளில் மறைந்திருந்தால் உள்மூலமென்றும் வெளிப்பட்டிருந்தால் வெளிமூலமென்றும், செண்டுபோலிருந்தால் செண்டுமூலமென்றும், சீழ் கசிந்தால் சீழ் மூலமென்றும், இரத்தம் கசிந்தால் இரத்த மூலமென்றும், சலங்கசிந்தால் சலமூலமென்றும், ஆணிபோலக் கடினமாயிருந்தால் ஆணிமூலமென்றும், கிரந்தியுபோலிருந்தால் கிரந்திமூலமென்றும், மூலமிருக்கும் நிலைமைக்குத் தக்கவாறு பெயரிட்டிருக்கின்றனர். எது எவ்வாறாயினும் மூலவியாதியின் உற்பத்தியையும் அதை நிவர்த்திக்கும் வகையையும் நாம் அறிதல் நமது நோக்கமாகும்.



189917

## சிகிச்சைக் கிரமம்.

மலசுத்தி அன்றாடம் கிரமமாய் ஆகும்படி செய்ய வேண்டியது, தாபனமிருந்தால் ஒற்றிடமிட்டு பொட்டலிகை கட்டவேண்டியது. மூலமுளைகளைக்கழுவி சுத்தி செய்து துவர்ப்பு மருந்துகள்மேலுக்குத்தடவவேண்டியது. ஆகார விஷயங்களில் தேக நிலைக்குத் தக்கபடியும் வியாதி சாந்தமாகும்படிக்கும் கவனம் செலுத்தவேண்டும். தக்க வைத்தியரிடம் சிகிச்சை பெற்றுக்கொள்ளவேண்டும்.

சேர்க்கத் தக்கவைகள்:— கருணைக்கிழங்கு, கீரை வகைகள், அத்திக்காய், சோற்றுக்கற்றாழை, நெல்லிக்காய், வெங்காயம், வெள்ளைப்பூண்டு, மாதுளம்பூ, வாழைப்பூ, ஆமணக்கெண்ணெய், வெண்ணெய் முதலியன. அதிக காரமுள்ள பதார்த்தங்கள் சேர்க்கக்கூடாது.

காப்பி முதலிய பானவகை சுக்கில சுரோணிதத்தில் விகற்பத்தை உண்டாக்கி வியாதியை அதிகப்படுத்துமாகையால் மூலவியாதியஸ்தர்கள் காப்பிக்குடியை அறவே ஒழிப்பது நலம்.

## மருந்து

துத்தி இலையை எண்ணெய்விட்டு வதக்கி ஒற்றிடமிட வேதனை நீங்கும். ஆகாசத்தாமரையை மூலமுளைமேல் வைத்துக்கட்டலாம்.

அன்னபேதி செந்தூரம், வங்க பஸ்பம், நாகபஸ்பம் கொடுக்கலாம்.

# மருந்துசெய் பகுதி.

## நாக பஸ்பம்.

சுத்திசெய்த நாகம் ரூபாயெடை 3, வாலை ரசம் ரூபாயெடை 3, சிலாசத்து ரூபாயெடை 3.

நாகத்தை உருக்கி அதனுடன் ரசத்தைச்சேர்த்து கல்வத்திலிட்டு சிலாசத்தும் பனைமட்டைச்சாறும் கூட்டி ஒரு நாள் (நான்குசாமம்) அரைத்து, காயவைத்து, ஒரே வில்லையாகத்தட்டி உலர்த்தி, அகலில் வைத்து மேலகல் மூடி, சீலை மண்செய்து காய்ந்தபின் 25-எருவில் புடமிடவும். புடமிட்டு எடுத்து மறுபடி கல்வத்திலிட்டு ஷை சாறு விட்டு நான்கு சாமம் அரைத்து காசு அளவில் வில்லைகள்செய்து உலர்த்தி முன் போலவே புடமிடவும். இவ்விதம் 7-புடமிட்டு எடுத்து நுணுக்கி புட்டிகளில் வைத்துக்கொள்ளவும்.

**அளவு:—** வேளைக்கு 1-குன்றுமணி முதல் 4-குன்றுமணி எடைவரை காலைமாலையாக நாளொன்றுக்கு இருமுறை வீதம் கொடுக்கவும்.

**அனுபானம்:—** நெய் அல்லது வெண்ணெய்.

**சகல மூலத்திற்கும்:—** மாதளம் வேர், சீரகம் சமஎடை சூரணத்தில் நாக பஸ்பம் வைத்து நெய் அல்லது வெண்ணெய் சேர்த்து உட்கொள்ளவும்.

**இரத்த மூலத்திற்கு:—** விளக்கெண்ணெய் எலுமிச்சம் பழச்சாறு சம எடை கலந்துகொள்ளவும்.

**கிராணிக்கு:—** தேனில்.

**மூலகிராணிக்கு:—** வாழைப்பூச்சாற்றில்.

**நீர்க்கடுப்பு, வெள்ளை, வெட்டைக்கு:—** இலர்தை இலைகளை மோர் விட்டு அரைத்து அதில் கொடுக்கவும்.



**உபயோகம்:—** நவ மூலம், சீதபேதி, அஜீர்ண பேதி மலபந்தம் முதலியன குணமாகும்.

**பத்தியம்:—** கடுகு, நல்லெண்ணெய், புளி, புகையிலை நீக்கவும்.

**குறிப்பு:—** நாகத்தை உருக்கி வெள்ளாட்டுப்பாலில் ஏழு தடவை ஊற்றி சுத்தி செய்யவும்

## காந்த செந்தூரம்.

சுத்திசெய்த காந்தத்தை கல்வத்திலிட்டு வெள்ளெருக்கன் பூ சாற்றில் ஒரு நாள் (நான்கு சாமம்) அரைத்து காசு அளவில் வில்லைகள் செய்து உலரவைத்து, அகலில் வைத்து மேலகல் மூடி சீலை மண் செய்து, காய்ந்தபின் 25-எருவில் புடமிடவும். இவ்வாறு மூன்று முறை புடமிட்டு எடுத்து பொற்றலைக்கரிப்பான் சாறு விட்டு அரைத்து வில்லைகள் தட்டி நான்காவது புடமிடவும். மறுபடிஎடுத்து அதில் கால் பங்கு அன்னபேதி சேர்த்து ஷை இலைச்சாறு விட்டு ஒரு நாள் அரைத்து முன்போல் புடமிடவும்.

**அளவு:—** வேளைக்கு 1-முதல் 2-குன்றுமணி எடைவரை காலை மாலையாக நாளொன்றுக்கிருமுறை சாப்பிடவும்

**அனுபானம்:—** தேன் அல்லது நெய்.

**உபயோகம்:—** ஜுரம், வாய்வு, கைகால் வீக்கம், பாண்டு முதலியன நீங்கும்.

**பத்தியம்:—** கடுகு, நல்லெண்ணெய், புளி நீக்கவும்.

**குறிப்பு:—** ஒரு சட்டியில் தண்ணீர் விட்டு அதில் காந்தத்தையும் கொஞ்சம் கொள்ளையும் போட்டு அடுப்பில்

ஏற்றி தண்ணீர் நன்றாய் கொதித்தபின் காந்தத்தை எடுத்துக் கொள்ள காந்தம் சுத்தியாகும்.

## பித்தசாந்திச் சூரணம்.

நாட்டுச்சீரகத்தை எலுமிச்சம்பழச்சாற்றில் ஒரு நாள் (4-சாமம்) ஊறவைத்து நிழலில் உலர்த்தி பின் இஞ்சிச்சாற்றில் 4-சாமம் முன் போலவும், முசுமுசுக்கைச் சாற்றில் நான்கு சாமம் முன்போல் செய்து இடித்து வஸ்திரகாயம் செய்து எடுத்துக்கொள்ளவும்.

அளவு:- வேளைக்கு அரைக்கால் ரூபாயெடை காலை மாலையாக நாளொன்றுக்கு இருமுறை சாப்பிடவும்.

அனுபானம்:- சீனிச்சர்க்கரை.

உபயோகம்:- பித்தம், கிறுகிறுப்பு, மயக்கம், அஜீரணம், வயிற்றுவலி நீங்கும்.

## வீக்கம் வற்ற கஷாயம்.

மிளகு தக்காளி, சங்கு, சுரை, நெருஞ்சில், தூதுவளை, கரிப்பான், நீர்முள்ளி, சிறுபூளை வகைக்கு ரூபாயெடை 3 எடுத்து ஒன்றரை படி தண்ணீர் விட்டு மூன்றுவீசம்படியாக வற்றவைத்து சாப்பிடவும்.

அளவு:- வேளைக்கு வீசம்படி காலை நடுப்பகல் மாலையாக நாள் ஒன்றுக்கு மூன்றுவேளை வீதம் உட்கொள்ளவும்.

உபயோகம்:- சுரவை, வீக்கம் முதலியன நீங்கும்.

குறிப்பு:- வீக்கம் அதிகமாயிருந்தால் மேற்சொன்ன கஷாயத்தில் சலமஞ்சரி, வெங்கார பஸ்பம், அயக்காந்த செந்தூரம் சேர்த்துக் கொடுக்கலாம்.



# அகத்தியர் குணவாகடம் 3000.

(சாமி, விருதை, சிவஞான யோகிகள்)

காப்பு.

கரிமுக னடியை வாழ்த்திக் கருத்தினி லமைத்துப் பின்னாற்
குருமுனி அருளிச் செய்த குணபாடந் தன்னைமுற்றும்
தெரிந்திட உலகத் தோரின் தேகத்தில் விளைந்த நோயின்
அருந்தொகை ஒவ்வொன் றுக்கும் குணமுடனருளு வேனே

நூல்.

ஆதியென்ற பராபரத்தின் பதத்தைப் போற்றி
அப்புவியில் மாந்தர்களுக் கமைந்த நோயின்
நீதியாய்த் தொகையதனை நிகழ்த்தக் கேளாய்
நிர்ணயமாய் வாதத்தில் எண்ப தாகும்
பாதியாம் பித்தத்தில் நாற்ப துண்டாம்
பரிந்ததொரு சிலேற்பனத்தில் தொண்ணூற் றாறும்
சோதியாய் இதற்குள்ளே அநேக நோயின்
சூட்சத்தைச் சொல்லுவேன் துலங்கக் கேளே. (1)

கேளப்பா சுரமதுதான் அறுபத்தி நான்கு
கெடியான சன்னியது பதிமூன் றாகும்
வாளப்பா வீச்சஞ்சு தோட மேழு
வளமான தோடத்தில் நீர்த்தோட மொன்று
நீளப்பா ரெத்தபித்தம் பதிமூன் றுக்குள்
நிலையாக வாறுவிதம் பெண்களுக் கேதான்
ஆளப்பா சுவாசமஞ்சு காச மஞ்சு
அடவான விக்கல்தான் எழு தாமே. (2)

ஆமேதான் க்ஷயரோகம் இருபத் தொன்றில்
அழகான குரல்கம்மல் ரோக மாறும்
நாமேதான் அருவருப்பு நோயு மஞ்சு
நலமான வாந்தியுட ரோக மாறும்

போமேதான் மருட்சி ரோகங்களைந்து
புகழான விடாய்ரோகம் பதினைந் தாகும்
ஓமேதான் உன்மாத ரோக மேழாம்
உத்தமனே பெண்மூர்ச்சை ரோக மஞ்சே. (3)

அஞ்சான மூல மதிலுற் பவித்து
அசையாத மூலநோய் இருப தையா
நஞ்சான அதிசாரம் ஈரைந் தாகும்
நலமான கிராணியது பத்தோ டொன்றும்
துஞ்சான அசீர்ணமாம் ரோகம் பத்தில்
துகையறவே விடபேதி ரோக மாறும்
பஞ்சான கிரிச்சனங்கள் இருப தாகும்
பாரோர்க்கு மேகமது இருபத் தொன்றே. (4)

ஒன்றான மேகத்தின் கட்டி பத்தாம்
ஒழுகிவரும் வெகுமூத்திர ரோக மொன்றும்
நன்றான பிரமியந்தான் பதிமூன் றாகும்
நாடுவெக்கை க்கட்டியதோ ரிருப தாகும்
குன்றான குடல்விருத்தி ரோக மேழு
குடிகெடுத்த குன்மம தீரெட் டதாகும்
அன்றான அண்டத்தின் ரோக மெட்டு
அறியாத அனுகதத்தின் ரோக மஞ்சே. (5)

அஞ்சடிக்கும் சூலையது பதினெட் டாகும்
அதன்பின்னால் உதிரத்தின் ரோகம் பத்தாம்
செஞ்சடிக்கும் பீலிகா ரோகம் நான்கு
கிளர்ந்துவரும் பாண்டு ரோகங்கள் ஏழு
துஞ்சடிக்கும் காமாலை பதிமூன் றாகும்
துக்கமுள்ள சோகையது ஈரய்ந் தாகும்
விஞ்சையென்ற விசற்ப ரோகம் ஏழேயாகும்
விதமான வசூரியது பதினே ழாமே. (6)

(விடாய்—தாகம்.)

(தொடரும்.)



# பெண்மக்கள் பகுதி.

## உலக்கை பகிஷ்காரம்.

(அடிமை.)

அவ்வூர் மைதானத்தில் அன்று மாலை அப்போது கூடிய 'மங்கையர்' மகாநாட்டுக்கு நமது அடங்காப்பிடாரி 'ராக்காயி அம்மாள்' அவர்களைத் தலைமைவகிக்கும்படி ஏகமனதாய்த் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறே அம்மணியும் ஆவேசத்துடன் ஆசனத்தமர்ந்தவுடன் ஆரவாரங்கள் வானைப்பிளந்தன. பின்னர் அம்மாள் நிகழ்த்திய அக்கிராசனப்பிரசங்கமாவது:—

எனது பிரியமுள்ள பெண்டுகளே! பாட்டிகளே! தாய்களே! அக்காள் தங்கைகளே! நாத்திகளே! கூத்திகளே! அத்தைகளே! சித்திகளே! சக்களத்திகளே! குட்டிகளே! இக்கூட்டத்திற்குத் தலைமைவகிக்க என்னகாரணத்தால் என்னைத்தேர்ந்தெடுத்தீர்களோ தெரியவில்லை. சரி; இனி என் செய்வது? ஏதோ எனக்குத் தெரிந்தமட்டிலும் தொண்டை அனுமதிக்கும்வரை பேசுகிறேன். நல்ல வேளையாய் நீங்களும் குஞ்சு குழந்தைகளை வீட்டிலேயே விட்டுவிட்டு வந்திருக்கிறீர்கள். நல்லது உங்கள் எல்லோருக்கும் நமஸ்காரம். தயவுசெய்து கொஞ்சம் கவனமாய்க் கேட்கவேண்டும். கொடுக்கல், வாங்கல், ரவிக்கை, புடவை, கம்மல், சினிமா முதலியவற்றை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். ஏனெனில் விஷயம் மிகவும் முக்கியம். ஆ! நான் என்னென்று சொல்வேன்? நமது இன்பமெல்லாம், நமது முன்னேற்றமெல்லாம் கிணறுவெட்டப் பூதம் புறப்பட்ட கதைபோலவே முடிந்திருக்கிறது. அடடா! இம்மண்ணில் பெண்ணாய்ப் பிறந்த நமக்குத் தொல்லைகள் ஒன்றா? இரண்டா? நெடுமால் திருமுருகா நித்தநித்தம் இந்த இழவா? என்பதற்கிணங்க ஓர் பக்கம் கணவன்; மறு பக்கம் மக்கள்; ஓர் புறம் ஏவல்; மறு புறம் அடுப்பங்கரை; பிழைப்போ அடிமை; பலனோ எச்சிலை; இதைவிட நாம் என்ன பெருமையைக் கண்டோம்? (வெட்கம்; வேட்கம்.)

இப்படியிருந்தும் நாம் மிகப்பொறுமையுடன் இக்கஷ்ட நிஷ்டூரங்களை எல்லாம் சமாளித்துக் கெட்டிக்காரிகளாய் உலகத்தை ஈடேற்றிக்கொண்டு வருகிறோமல்லவா? காலச் சக்கரம் சுழலச்சுழல, அறிவென்னும் பரிதி நம்மிடையும் பிரகாசிக்க, நாம் விழித்துக்கொண்டோம். ஒருவரைப் பல நாள் ஏமாற்றலாம்; பலரை ஒரு நாள் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எப்போதுமே ஏமாற்றுவோமென்பது மதியீனமன்றோ! எனவே நமது விழிப்பை நன்கு உணர்ந்துகொண்ட மீ சை க் கா ர ர் க ள் நமக்குச்சிறிது உற்சாகம் ஊட்டினார்கள். நமது அடிமை விலங்கைச்சிறிது லூஸ் (loose) செய்வதாகவும் உறுதி சொன்னார்கள். ஆனால் இதெல்லாம் அழுத பிள்ளைக்கு வாழைப்பழம் கொடுத்த மாதிரி என்பதை மட்டும் நாம் மறந்துவிடலாகாது. (கேளுங்கள், கேளுங்கள்.) அந்தோ! என் தங்கங்களே! கோதைகளே! இவ்வளவுதூரம் நாம் கிளர்ச்சி செய்தபின்னர் தான் அரசாங்கமும் நமக்கு அதிகப்படியான வாக்குரிமையளிக்க முன் வந்திருக்கிறது. இந்த நா ச மா ய்ப் போ ன ஆடவர்கள் சாமான்யமாய் நகரசபை, ஜில்லாபோர்டு, சட்டசபை நாற்காலிகளில் ஏதோ அத்திபூத்தாற்போலவாவது நம்மில் ஒருத்தியைஉட்காரவைப்பார்களா? நீங்களே சொல்லுங்கள். (ஒரு சப்தம்: கனவிலுமில்லை) அப்பப்பா! இப்புருஷர்கள் செய்யும்அட்டகாசங்களுக்கு கணக்குண்டா? வழக்குண்டா? தட்டிப்பேச வகையுமுண்டா? 'இம்' என்றாலும் தப்பு; 'ஆம்' என்றாலும் தப்பு; என்னே நமது மானங்கெட்ட வாழ்க்கை! என்னே நமதுபிறவிகள்! பரிதாபம்! பரிதாபம்! சரி: தொலையட்டும்; இனியாவது இவர்களுக்குப் புத்தி வந்தால் போதுமென்று நா ம் வாளாவிருக்கப்போக இப்போது மறுபடியும் நம்மைத்துன்பம் எதிர்நோக்குகிறது. கேட்டீர்களா? அந்தக் கா ந் தி பண்ணும் அக்கிரமத்தை? ஏதோ பெரியமனிதர்; பாவம் ரொம்பவும் சிரமப்படுகிறாரே என்றெண்ணி நாம் அந்தக்கிழவன் சொன்னபடிக்கெல்லாம் தாளம்போட்டு வந்தோமே. கொஞ்சமாவது அப்பாழும் ஜன்மத்துக்கு நன்றி விசுவாசமிருக்கிறதா? 'மாதரசிகளே! உங்களைத்தான் நம்பியிருக்கிறேன்; உங்கள் சுகமே எங்கள் சுகம்; உங்கள் விடுதலையே தேச விடுதலை; நீங்கள் இனி



கதர்தான்கட்டவேண்டும். நீங்கள்தான் வைராக்கியசாலிகள்' என்றெல்லாம் பகட்டினார். எப்படி அதைத்தூக்கிச்சுமப்போம்? என்று கேட்டோம். நீங்கள் எங்களைச்சுமப்பதில்லையா? என்று திருப்பிக்கேட்டார். அதுவும் நியாயந்தானென்று அந்த முறட்டுத் துணிகளையும் முணுமுணுக்காமல் சுமந்துகொண்டுவருகிறோம். அதன்பின் 'ஹரிஜனம்' 'தீண்டாமை' என்று சொல்லிக்கொண்டு தேசமெங்கும் சுற்றியடித்து நம்மிடமுள்ள அறைகுறைத்தங்கம், வெள்ளிகளையும் ஒரு தட்டுத்தட்டிக்கொண்டார். இதற்கும் நாம் சம்மதித்தோம். இப்படியிருக்க 'வளர்த்தகடா மார்பில் பாய்ந்ததுபோல்' இப்போது நமக்கு என்ன கட்டளை இட்டிருக்கிறார்தெரியுமா? ஐயோ! அதுதான் தந்திரம்; ஏமாற்றம்; என்னே இவரது கல் நெஞ்சம்! கூர்ந்து கவனியுங்கள். கிராமப்புனருத்தாரணமாம்; பொருளாதார அபிவிருத்தியாம்; வேலையில்லாத் திண்டாட்ட நிவர்த்தியாம்; பூர்வீக கைத்தொழில்களாம்; மறுபடியும் நமக்கு உலக்கை உத்யோகமாம்; கைக்குத்து அரிசிதான் வேண்டுமாம்; மெஷின்கள் கூடாதாம்; அது சுகாதாரத்துக்கு கெடுதலாம்; எனவே பழைய கருப்பனான உலக்கையைப் பிடித்தால்தான் நம் நாடு உருப்படுமாம். பார்த்தீர்களா வேடிக்கையை? (சூழ்ச்சி, சூழ்ச்சி) எது எக்கேடுற்றெப்படிப்போனால் நமக்காவது என்ன? "கையினில் உலக்கைபற்றிக் காந்தளின் உதிரம் பாய, மெய்யினில் வியர் நீர் சிந்த விழியினில் அருவி பாய..." பண்டு நமது சந்திரமதி காலகண்டய்யனிடம் அனுபவித்தது போல, இந்த இனத்துரோகிகளான இரக்கமற்ற ஆண்களுக்கு நாம் இவ்வளவு காலமாய் உலக்கையால் குத்திக் குத்தி வடித்து வடித்து அழுததுபோதாதா? இன்னுமா இக்கொடுமை? இன்னுமா நாம் அடிமை? ஆ! முன் குத்தின வலியே இன்னும் தீ ர் ந் த பா டி ல் லை. இந்தநிலைமையில் 'போன மச்சான் திரும்பிவந்தான் பூமணத்தோடே' என்பது போலன்றோ இந்த உலக்கைச்சனியன் வரப்பார்க்கிறது? வேண்டுமானால் அந்த மகாத்மாவும், அவரைச் சார்ந்த ஆண் வர்க்கமும் தங்களுக்கு இஷ்டமான உலக்கைகளை எடுத்துக்கொண்டு குத்தட்டும். நமக்கென்ன ஆக்ஷேபனை? அப்பொழுதல்லவா அதன் அருமை தெரியவரும்.

தவிரவும், இதில் நமக்கென்ன பலன்? ஆதலால் இன்றே இக்கொடுமையைத் தடுக்கவேண்டாமா? [ ஆம்; ஆம். ] இந்த உலக்கை என்ற பதத்தை நம் அகராதியிலிருந்து ஒழிக்கவேண்டாமா? இதில் கொஞ்சமேனும் காலதாமதஞ்செய்யலாமா? ஆகையால் தான் நாம் இங்கு இவ்வகாலத்தில் இவ்வளவு அவசரமாய்க் கூடியிருக்கிறோம். என் ஆருயிர்ச்சீமாட்டிகளே! எழுங்கள்! எழுங்கள்! உலக்கையைப் பகிஷ்கரியுங்கள். வீணே தூங்கவேண்டாம். இனிமேல் நான் என்ன சொல்லட்டும்,? விடிய விடியப்பேசினாலும் அது தானே? இதை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால் நாளை நமது பெண் குழந்தைகள்- எதிர்கால மாதரசிகள்— நம்மைத்தூற்றி வசை புராணம் பாடுவார்கள். அந்தப்பழி நம்மைச்சாரும். அதற்கு இம்மியும் இடங்கொடுக்கவேண்டாம். சொன்னேன். சொன்னேன். (கரகோஷம்.)

இனி நாம் தீர்மானம் நிறைவேற்று முன்பு, இவ்வளவு தூரம் உங்கள் பல்வேறு அலுவல்களையும் பிடுங்கல்களையும் பொருட்படுத்தாது அற்பமனுஷியான எனது வார்த்தைகளுக்கு உங்கள் திருச் செவிகளை அர்ப்பணஞ் செய்தது பற்றி என்மனமார்ந்த வந்தனத்தை உங்களுக்குத்தெரிவித்துக்கொள்கிறேன். பராசக்தியின் அருளால் உங்களுக்கு என்றும் ஜெயமே கிட்டுவதாக. வாழ்க! வாழ்க! இயந்திரங்கள்வாழ்க. வீழ்க! வீழ்க! உலக்கைகள் வீழ்க.

பின்னர் அடியிற்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

"இந்து மாதர்வர்க்கத்தின் அபிலாஷைகளுக்கு முட்டுக்கட்டை போடவும் அவர்களை நிரந்தர அடிமைகளாய் நடத்தவும் கருதி நரகவேதனைக்கொப்பான உலக்கைத்தொழிலை கிராமப்புனருத்தாரணம் என்ற பூச்சாண்டியைக்காட்டி, மகாத்மா எங்களுக்கு மீண்டும் ஆக்ஞாபிப்பதால் அதை இம்மகாநாடு தீவிரமாகக் கண்டிப்பதுடன் இயந்திரங்களை முழுமனதுடன் வரவேற்கவும் தீர்மானிக்கிறது.

ஒப்பம்:— அடங்காப் பிடாரி, ராக்காயி, தாடகை நாச்சி, குறட்டைக்குப்பாயி, அறட்டை அழகாயி, ஒய்யாரி உண்ணுமலை, நீலித்தாயார், எழுத்தனி; [illegible]

# நாடகப்பகுதி.

## நாகானந்தன்.

(லேட் H. ராமசாமி அய்யர் அவர்களால் எழுதப்பட்டது)

(16-ம் பக்கத்தொடர்ச்சி.)

அங்கம் 1.] [களம் 2.

சத்தியவிரதன் } அமைச்சர்கள்.
சத்தியகீர்த்தி }

இடம்:— அழகர் சோலை.

காலம்:— இரவு.

**சத்தியவிரதன்:**— நண்பரே! இன்று நடுப்பகலில் வராகத்தைத்தொடர்ந்து சென்ற நம் வேந்தரைக் காணப்பிரிந்து ஏகினர் அவையோர்; நாமும் இவ்வழகர் சோலை நாடி வந்தனம். மன்னவரைத்தேடிப் பொழுதும்பட்டது. இருளுங் கவிந்தது. பின்னும் சந்திரன் வரவால் சற்றே ஒளியாகியது. இன்னும் அவரைக் கண்டோமில்லை. அவர் எங்கு சென்றனரோ? எத்துயரடைந்தனரோ? என் செய்வது?

**சத்தியகீர்த்தி:**— அன்பரே! நாமடைந்த அவதிக்கோர் அளவில்லை. காடுகள் கடந்தனம். வனங்களகன்றனம். குன்றுகள் தாண்டினம். அஸ்தமன சமயம் அழகர் சோலை அடைந்தனம். கடு நடையால் கால்கள் தூணென வீங்கின. முள்ளும் பரலும் கால்களைக்குத்தின. மிலாறுகள் அங்கமெங்கும் பற்றிப் பீய்த்தன. அணி ஆடை முற்றும் குருதி வெள்ளம் நனைத்தது. நீரின் வேட்கையும், பசியின் பிணியும் படுத்தும் பாடோ அளவில்லை. நம் பாடே இவ்வாறாயின் மன்னவர்தம் பாட்டினை பகரவும் வேண்டுமோ?

**சத்தியவிரதன்:**— நண்பரே! வெண்ணிலாக்காய திண்ணிருளகன்று தெள்ளென யாவும் புலப்படுகின்றது. வான் ஓங்கிய மரங்களும், அவற்றுள் கூகைகள் கூச்சலும் மனதினுள் அச்சமாக்குவதாயுள. வனத்தினுள் ஒளிந்து வசித்து

ஊளையிடும் நரிகள் ஓசையும், காட்டுப்பன்றிகளின் உறுமலும், காட்டுப்பூனைகளின் அரவமும் காதினைத்துளைக்கின்றன.

சத்தியகீர்த்தி:– அன்பரே! தெள்ளெனத் தெளிந்து கொடிமின்னலையொத்தபளபளவெனப்பாய்ந்தோடும்காட்டோடையில் பன்றியும், கரடியும், மரையும், மானும் ஒருமித்து வந்து நீரருந்துவதைக்காணீர்.

சத்தியவிரதன்:– அன்பரே! சற்று தூரந்தன்னில் ஆளரவம்கேட்கிறது. இதுசமயம் இவ்வனம்வருபவருமுண்டோ? ஒருக்கால் நம்மிறைவனைத்தேடும் நம்போன்றவரோ அவர்? அதோ தோன்றும் மேட்டினிலெய்தி வருபவரை கவனிப்போம். (முன் பெயர்தல்.)

சத்தியகீர்த்தி:– அன்பரே! நோக்குக அவ்வழி. யாவரோ இருவர் நாம் செல்திசை நோக்கிப் பெயர்கின்றனர். அவர்களில் ஒருவர் ஆடை அணிகளால் உயர்குலத்துதித்தவராய்த் தோற்றுகின்றனர். அவர் தம் தேக அமைப்பும், நடையின் வண்ணமும் நம்மிறைவரோ என ஐயம் கொள்ளவாகுது. மற்றவன் சின்னஞ்சிறுவன். நல்லமைப்பினன். அவன் அவர்பாலொழுகுவதை நோக்கின் தந்தைபால் மகன் ஒழுகும் வண்ணமுளது. ஆதலின் அவரை நம் மன்னன் எனக்கொள்ள ஐயமாகுது.

சத்தியவிரதன்:– நண்பரே! அவரே நம்மிறைவர். அவருடன் வருபவன் நாகானந்தனெனும் இவ்வன பரிபாலகர் தலைவன். அவன் தபோதனர் ஆச்சிரமத்தே வளர்ந்து, அவர்பால் கல்விமுற்றுங் கற்று, அவர் தம் தபோவனத்தை காவல் புரிபவன். மன்னவரை முன் பின் அறியாதவன். அவரும் தம்மை வெளிக்காட்டினரில்லைபோலும். அவன் உத்தம குணசீலன். ஆதலின் அவன் மாட்டு அவருக்குப் பிரியம் ஏற்பட்டிருத்தல்வேண்டும். அதுபற்றி அவனை அவ்வாறு நடத்துகின்றனர். ஆதலின் எதிர்கொண்டு செல்வோம் வாரீர்.

(இருவரும் மறைதல்

---



சுகுணபாண்டியன்—நாகானந்தன்.

சத்தியவிரதன்—சத்தியகீர்த்தி.

இடம்:—அழகர்சோலை.

காலம்:—இரவு.

நாகானந்தன்:— ஐயா! இஃதன்றோ தாம் கொன்ற புலி. அம்ம! இது பொல்லாப்புலியே. தாம் இதன் வசப்படாது தப்பி மீண்டதும் நலமே.

சுகுணன்:— குழந்தாய்! இருள் சூழ்ந்த காரணம்பற்றி பாய்ந்தோடிவந்த மானை புலியெனக்கொண்டு அருண்டு அம்பால் கொன்றேன். இதன் பொருட்டு என்னை ஏளனம் செய்வது உசிதமா?

நாகானந்தன்:— ஐயா! தம்போன்ற உயர்குல மாக்கள் புகுந்து வேட்டையாடுதல் குற்றமென மன்னவனால் விதித்துள்ள இவ்வனம் இராக்காலங்களில் ஒருவருமறியாது அவர்கள் புகுவதும் சாதுவான மான்களைக்கொன்று கரந்தேகுவதும் சுபாவமே. ஒவ்வொருவரும் அகப்பட்ட பொழுது பகரும் விடையும் இதுவே. அது காரணம்பற்றியே தங்களை ஏளனம் செய்தது.

சுகுணன்:— குழந்தாய்! அவ்விதம் தவறிழைப்பவனும் இழைத்தவரை மறைப்பான் பொய்புரைப்பவனும் யானல்லன். தெரியாத்தனமாய் மானினைக்கொன்றேன். குற்றமாய்க்கொள்ளாது என்னை மதுரை செல்லும் பாதைவரை அழைத்தேகுக.

நாகானந்தன்:— ஐயா! தாமிழைத்தது பெருந்தவறே. நீர் அதனைக்கருதிச்செய்தீர், அன்றிக்கருதாது செய்தீரென்பதைத்தீர்மானிப்பது நமது இறைவன் கடமையேயாகும். என் கடமையெல்லாம் தவறிழைத்தோர் தப்பி ஓடாது பிடித்துசிறைசெய்து மன்னவர்பால் அனுப்புவதே. நீவிரோ இரவில் தபோவனம் புகுந்து வேட்டையாடுதல் தகாத வனமானைக்கொன்றீர். வேட்டைக்குரிய ஆடையாபரணங்கள் அணிந்துள்ளீர். அடிக்கடி இங்கு வந்து பிடிபடும் உயர்குல மக்களுள் ஒருவர்போலுமிருக்கிறீர். இது காரணங்கள்

பற்றி நீவிர் என் சிறையானீர். யாதும் பந்தமில்லாது மன்னரவைபெயரஉடன்படின் அவ்வாறே மரியாதையாய் அழைத்தேகுகிறேன். அன்றேல் பந்தித்து பலவந்தமாக கொண்டேகவேண்டிவரும்.

**சுகுணன்:—** குழந்தாய்! நான் தெரியாது தகாது செய்தவன். திரிகரண சுத்தியாய் தவறிழைத்தவனில்லை. அது பற்றி யான் மன்னன் தண்டனைக்காளாகவேண்டுவது தர்மமல்ல. என் போன்ற நிரபராதியான ஒரு உயர்குலத்தோனை மன்னவைக்கு சிறையாய்க்கொண்டுபோவதும், பல்லோர் மத்தியில் விசாரணைக்காளாக்குவதும், தக்க சாக்ஷிகள் இல்லாக்குறைவால் எண்ணிச்செய்யாக் குற்றத்திற்கு தண்டனை யான் பெறுவதும் தர்மமா? அறங்கருதியேனும் என்னை என் வழிச்செல்ல விடுக.

**நாகானந்தன்:—** ஐயா! முறைமையன்றென்பது ஒன்றுண்டு. அது எது சமயம்? யான் தமது கிரியையையும் எண்ணத்தையும் அறிந்தவிடத்தன்றோ? யானோ தமது குணத்தொனி கேட்டு இங்கு வந்தவன். தமது விருத்தாந்தம் சற்றுமறியாதவன். தம்போன்றோர் எண்ணித்தவறிழைத்தசமயமும் புகலும் மொழியும் இதுவே. ஆதலின் தம் வாய்மொழியின் உண்மையறிவதெப்படி? தமது சொல் சத்தியமாயின் யான் விடுவது தர்மமாகும். அன்றேல் குற்றமாகும். தவிர குற்றத்திற்காளாவதிலும் தர்மாதர்ம விசாரணைக்குரித்தாகிய மன்னவர்பால் தம்மைநான் இட்டேகுவது கடமையன்றோ! ஆதலின் தயை புரிந்தென்பின் வருக.

**சுகுணன்:—** குழந்தாய்! மன்னவையில் யான் பெற இருக்கும் அவமதிப்புக் கருதி யான் வர மறுப்பின் என் செய்வாய்?

**நாகானந்தன்:—** ஐயா! தம்முடன் போர் புரிந்தேனும் தமக்கு விலங்கிட்டு தம்மை அரசவை அழைத்தேகுவேன்.

**சுகுணன்:—** குழந்தாய்! அதி வீரசூரனை என்னுடன் போர் தொடுத்து என்னை பந்தித்து இட்டேகும் ஆற்றல் உள்ளான் நீ யாவாயா? இப்பரத கண்டத்திலேயே ஒருவருமிலர் என்பது என் துணிபு.

(தொடரும்.)

பல மருந்துகள் சாப்பிட்டும் பயனில்லையா?

சி. எம். சாமி

# தாம்பிர பஸ்பம்

சாப்பிடுங்கள்.

தீராதெனக் கைவிடப்பட்ட சகல வியாதிகளையும் தீர்க்கும் வல்லமையுடையது சி. எம். சாமி மருந்துகள் தான் என்பதை மறவாதீர்கள்.

**உத்திரவாதமுள்ளது.**

ஒருமுறை எங்கள் மருந்துகளை உபயோகியுங்கள்.

ஏராளமான நற்சாட்சிகளும், தங்க மெடல்களும் பெற்று ஏழு தலைமுறையாக அனுபவசித்தியடைந்தது.

ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளை குணமாக்கிய அபூர்வ அவிழ்தம்.

குஷ்டம், திமிர், மதமதப்பு, யானைக்கால், குன்மம், வெள்ளை, வெட்டை, அரையாப்பு, கண்டமாலை, கன்னப்புத்து, பவுத்திரம், மேகவாத ரோகங்கள், பக்ஷவாதம், க்ஷயம், பாண்டு, காக்கை வலிப்பு இன்னும் இதர கர்ம வியாதிகளும் எவ்வளவு நாட்பட்டதாயினும் எந்த மருந்திலும் தீராதிருப்பினும் அவசியம் தீரும்.

100-வேளைபஸ்பம் அனுபானத்துடன் ரூ. 50.

50-வேளை „ „ ரூ. 25.

ஏழைகளுக்குப்பாதி விலை. தபால் சார்ஜ் வேறு.

**மலையப்பசாமி வைத்தியசாலை,**

**பழனி. S. I.**

# ஆப்ரேஷன் அவசியமில்லை!

அதியற்புதமான அவிழ்தம்!

மூலரோகசங்காரி

என்ற

# நாகபஸ்பம்

உபயோகியுங்கள்.

இம்மருந்து மூலநோயால் வருந்துபவர்களுக்குக் கொடுத்து மிக அனுபவமடைந்தது. இங்கிலீஷ் டாக்டர்களிடம் ஆப்ரேஷன் செய்யவேண்டிய அவசியமே இல்லை. மூல முளை தானே கரையும். சீழ் மூலம், இரத்தமூலம், தோல் மூலம், குத்தல், ஆசனத்துவாரத்தைச்சுற்றிலும் சிறு சிறு கொப்பளமுண்டாகுதல், மலபந்தம் முதலிய சகலவித மூல ரோகங்களையும் குணப்படுத்தும். உத்தரவாதமுள்ள சிறந்த ஔடதம்.

24-வேளை புட்டி 1-க்கு விலை ரூ. 4—0—0.

---

நற்சாட்சி.

ஐயா,

நான் சென்ற சில மாதங்களுக்கு முன் என்னுடைய மூல வியாதிக்காக தம்மிடமிருந்து நாக பஸ்பமும் மூல குடோரி லேகியமும் வரவழைத்துச் சாப்பிட்டதில் என்னுடைய வியாதி பூராவும் குணமடைந்துவிட்டது. ஷை வியாதி எனக்கு சுமார் 5-வருஷமாயிருந்தது.

(Sd.) எஸ். கே. எம். சாமி,
ஹெட்மாஸ்டர், போர்டு ஸ்கூல்,
கடுவெட்டம், நீலகிரி.

6—3—34.

---

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி. S. I.

வெட்டை முற்றினால் கட்டை

என்பதை அறிவீர்கள்.

அதாவது வெள்ளை என்ற நோய் ஒருவனைப் பீடிக்குமானால் அது அவனைவிட்டு இலகுவில் போகாதென்பதுதான் பொருள்.

அதைக் குணப்படுத்...

சி. எம். சா...

கனோரியா க்யூர்

அல்லது

# பிரமேக நிவாரணி

உபயோகியுங்கள்.

ஆண், பெண், இருபாலர்க்கும் உண்டாகும் வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீர்ச்சுருக்கு, நீரோடு விந்து கலந்து விழுதல், கை, கால், கண் எரிச்சல், அதிக உஷ்ணத்தால் ஏற்பட்ட நீரெரிச்சல், மேகநோயுள்ள பெண் சேர்க்கையால் உண்டாகும் பிரமேகம், தந்திமேகம், மஞ்சள்வெள்ளை, மூத்திரக்குழியில்காணும் ரணம், மூத்திர அடைப்பு, கோச வீக்கம், முதலியவற்றை ஆச்சரியப்படும்படி சுகமாக்கும்.

24-வேளை புட்டி 1-க்கு விலை ரூ. 2—0—0.

---

தங்கள் பிரமேக நிவாரணியை நான் வாங்கிசாப்பிட்டதில் எனக்கிருந்த வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலியன நின்றுவிட்டது.

(Sd.) வெ. மொட்டையன்,
அப்பிபாளையம்,
ஆண்டாங்கோவில் போஸ்ட், கரூர்.

---

மலையப்பசாமி வைத்தியசாலை,
பழனி. S. I.

# ஸ்கலிதமா?

இதைப்போல் கொடிய வியாதி வேறொன்றில்லை.
இதை ஆரம்பத்தில் கவனியாது விட்டு
விடுவீர்களானால் நீங்களே உங்களைக்
கெடுத்ததுபோலாகும்.

இன்றே

## ஸ்கலிதநிவாரணி

உபயோகியுங்கள்.

129417

சம்பூர்ணகாலத்திலன்றி இதரவேளைகளில் இந்திரியம் தாதுவை வெளியாகுதல் என்பது ஒரு மானக்கேடான வியாதி. இது நித்திரையில் சுக்கிலம் வெளிப்போதல், கனவில் பெண்களைக் கூடுவதுபோலத் தோன்றி தாது நழுவல், சரீரம் இளைத்தல் முதலியனவற்றை நீக்கி, வீரிய விருத்தியையும், தேக பலத்தையும் அடையச்செய்யும்.

24-வேளை விலை ரூ. 2—0—0.

---

நேர்த்தியான பற்பொடி.
ஆடும் பல்லை ஆடாது நிறுத்தும்.
பல்லுக்கு உறுதி தரும்

## கல்நார் பற்பொடி.

பல்வலி, பல்லில் ரத்தம் வருதல், பல்குத்து, எயிறு ஊத்தல், வாய்நாற்றம், தந்தசூலை, வாயில்நீரூறல், முதலிய சகல தந்த நோய்களையும் நீக்கி, பற்களுக்கு உறுதியையும் ஒளியையும், முக வசீகரத்தையும் உண்டாக்கும்.

பாக்கட் 1-க்கு விலை அணா 1. டஜன் விலை அணா 12.

---

**மலையப்பசாமி வைத்தியசாலை,**
**பழனி S. I.**

## கட்டுரை எழுதுவோர்

### கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

1. விஷயங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் சுத்தமாக மையினால் எழுதப்படவேண்டும். சித்தனில் மூன்று அல்லது நான்கு பக்கங்களுக்குள் அடங்கக்கூடிய விஷயங்கள் முதன்மையாகக் கவனிக்கப்படும்.

2. பிரதி ஆங்கில மாதம் பத்தாம் தேதி பத்திரிகை வெளிவரும். ஆசிரியரால் அங்கீகரிக்கப்படும் கட்டுரைகள் மட்டும் பிரசுரிக்கப்படும்.

3. சித்தனில் பிரசுரமாகும் எல்லா விஷயங்களின் காபிரைட் பிரசுரம் செய்வோர்க்கே உரிமையாகும்.

4. கட்டுரையாளர்களின் கருத்துகளுக்கும், அபிப்பிராயங்களுக்கும் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியாகார்.

5. நப்பி பிரசுரிக்கும் கட்டுரைகள் ஏற்கனவே உரிமையாக்கப்பட்டிருந்தால் அதற்குப் பத்திரிகாசிரியர் உத்தரவாதியன்று.

6. கட்டுரைகளை கூட்டவும், குறைக்கவும், ஏற்றுக் கொள்ள மறுக்கவும் பத்திரிகாசிரியருக்கு அதிகாரமுண்டு.

7. அங்கீகரிக்கப்படாத கட்டுரைகளை திருப்பி அனுப்புவதாக உறுதி கூற முடியாது. தபால் தலை அனுப்பினால் மட்டும் திருப்பி அனுப்பப்படும்.

### ஏஜண்டுகள் தேவை.

எமது பத்திரிகைகளை விற்பதற்கு எல்லா ஊர்களிலும் ஏஜண்டுகள் தேவை. விபரத்திற்கு எழுதவும்.

விலாசம்:— மானேஜர்,
**சித்தன்,**
பழனி. S. I.


Regd. No. M. 3210


வாலிபம் பெற

# மன்மத குளிகை

உபயோகியுங்கள்!

எதிர்பாராத
தேகபுஷ்டி, போகசக்தி, வீரியவிர்த்தி
அடைவது திண்ணம்.



எண்ணிறாத
தைரியம், உற்சாகம், ஆரோக்கியம்
பெருமைக்கு நிச்சயம்.

சரீரத்துக்கு வலுவைக்கொடுத்து,
ஆண்மையை அதிகப்படுத்தி, இரத்தத்தை
சுத்திகரித்து, தாதுபுஷ்டியைத் தரும்.

20-குளிகை விலை ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

மலையப்பசாமி வைத்தியசாலை,
பிராஞ்சு:- 1-54, அருணாசல நாயக்கன் தெரு,
சிந்தாத்திரிப்பேட்டை, மதராஸ்.


Edited. Printed & Pu... P. Sami
at the Nityana...